மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை : - **திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L.,L.L.M.,DJJJ.,Psy.,**

மாவட்ட உரிமையியல் நீதி பதி,(முழு கூடுதல் பொறுப்பு)

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி.

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சுபகிருது வருடம் தைத் திங்கள்06 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 275/2021-ல்**

**அசல் வழக்கு எண்.86/2017**

1. தனலெட்சுமி
2. குமார்
3. செல்வராணி
4. செல்வராஜ். ...மனுதாரர்கள்/வாதிகள்

**// எதிர்//**

1. விமலா
2. ஸ்நேகா
3. ப்ரீதா
4. திஷா

(2 முதல் 4 இளவர்களுக்காக அவர்களது தாயாரான
1ம் எதிர்மனுதாரர் விமலா)

5. மாயகிருஷ்ணன்
6. சார்பதிவாளர் , மன்னார்குடி
7. மாவட்ட ஆட்சியர், திருவாரூர்.

....எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

இம்மனு 08.09.2021ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 23.12.2022 ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. A. தினகரன்** அவர்களும், 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் **திரு. S. இராமகிருஷ்ணன், திருமதி. R. கலையரசி, திரு. S.பாலகுமார்** ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு

வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று( 20.01.2023) இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது அசல் வழக்கு எண். 77/2020 ம் அசல் வழக்கு எண். 86/2017 வழக்கும் ஒரே வழக்கு என்பதால் ஒரே வழக்காக நடத்துவதற்கு அனுமதியளிக்குமாறு பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுவின் சுருக்கம் :-</u>**

அசல் வழக்கானது 03.09.2021 ம் தேதியன்று விசாரணைக்காக போடப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கு எண். 77/2020 செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இரு வழக்கும் ஒரே வழக்கு என்பதால் ஒரே வழக்காக நடத்துவதற்கு இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

**3. 5 ம் <u>எதிர்மனுதாரர்/ 5 பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-</u>**

இவ்வழக்கானது விளம்புகை பரிகாரம்கோரி குறுக்கு விசாரணையில் இருந்து வருகிறது என்றும், அசல் வழக்கு எண். 77/2020 -ல் எழுவினாக்கள் வனையப்பட்டு 3 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளதால் ஒரே வழக்காக நடத்த இயலாது என்றும் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் எதிருரையில் கூறப்பட்டுள்ளது.

**4.** இ ரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

| | |
|---|---|
| 5. | **இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை ஆகும்.** |

இம்மனுவில் இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் ஆவண சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில்......

அசல் வழக்கு எண்.86/2017 ஆனது வா.சா.1 விசாரிக்கப்பட்டு அவரை குறுக்கு விசாரணைக்காக போதிய அளவு வாய்ப்பு கொடுத்து கடைசி வாய்ப்பாக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் இந்த இடைநிலை மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி அசல் வழக்கு எண். 77/2020 ஆனது நாளது தேதிவரை தரப்பினர்களுக்கு அழைப்பாணை முற்றிலுமாக சார்வு செய்யப்படாமல் இருந்து வருகிறது. ஐந்து ஆண்டுகள் கடந்த ஒருவழக்கின் தற்போதைய நிலையும், இன்னும் வழக்கு தரப்பினர்களே முன்னிலையாகாத வழக்கின் நிலையும் தரப்பினர்கள் ஒரே நபர்களாக இருந்தபோதும், அதன் சங்கதிகள் தன்மை பொறுத்து வெவ்வேறே என்று இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

அதன் அடிப்படையில் இரு வழக்குகளையும் ஒன்றாக சேர்ந்து நடத்துவது என்பது வீண் கால விரையம் மற்றும் நீதிமன்ற நேர விரயம் என்பதையும் இந்நீதிமன்றம் கருத்திற்கொண்டு இம்மனுவினை அனுமதிப்பதால் தரப்பினர்கள் பாதிப்படைவார்கள் என்பதையும், வழக்கு மேலும், காலம் தாழ்த்தப்படும் என்பதாலும் இம்மனுவினை தள்ளுபடி செய்வதே உசிதம் என்று இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

**முடிவில்,** இம்மனுவானது எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. மனுதாரர், எதிர்மனுதாரருக்கு ரூ. 500/- த்தை இவ்வுத்தரவு பிறப்பித்த 10 தினங்களுக்கு செலுத்தவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு,

சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு

திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று ( 20.01.2023) அவையறியப்பகரப்பட்டது.

A S AMEERDHEEN

Digitally signed by A S AMEERDHEEN
DN: cn=A S AMEERDHEEN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.(மு.கூ.பொ)